சாதகமாக இருக்கிறது. அரசாங்கம் சில நேரங்களில் அதை வேறு நாடுகளிலிருந்து கிழக்கு ஜெர்மனி நாட்டிலிருந்து சரியாக பரிசீலித்து வாங்காத காரணத்தினுல், பல டிராக்டர்கள் சும்மா இருந்துகொண்டிருக்கின்றன. விவசாயிகள் விரும்பிக் கேட்கின்ற டிராக்டர்களை, விலை கூடுதலாக இருந்தாலும், அதையே வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

ரூ. 30,000, 40,000 கொடுத்து எல்லா விவசாயிகளும் டிராக்டர்களை வாங்க முடியாது. ஜப்பான் நாட்டில் சிறிய டிராக்டர்கள், மாடுகளை வைத்து வேலை வாங்கக்கூடிய அளவுக்கு டிராக்டர்கள் வைத்து உபயோகப்படுத்தியிருப்பதை நானே நேரில் பார்த்து வந்திருக்கிறேன். அப்படிப்பட்ட டிராக்டர்களை நம் நாட்டில் அறிமுகம் செய்ய வேண்டும். அல்லது அங்குள்ள கம்பெனியின் ஒத்துழைப்பு பெற்று, இங்கேயே உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதிகபட்சமாக ரூ. 5,000-க்கு மேல் விலை கொடுக்கப்படாத அளவுக்கு டிராக்டர்கள் செய்கிறார்கள். அதற்கான முயற்சியை இங்கேயும் செய்யுமாறு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களையும், தொழில் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தமிழகத்தில் அரசு அம்மாதிரி டிராக்டர்களை உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தை ஏற்கவேண்டுமென்று என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர் பாதுகாப்பு பற்றி நாம் மிகவும் கண்காணிப்போடு இருக்க வெண்டும். ஏனென்று கேட்டால் உற்பத்தி ஒரு பக்கம் பெறுகிக் நீகாண்டிருக்கிறது. மறு பக்கம் உற்பத்தியாகும் தானியம் அழிகிறது. வெள்ளத்தால் அழிகிறது, புயலால் அழிகிறது, பூச்சிகளால் அழிகிறது. றெறபடி நல்ல கண்காணிப்பு இல்லாத காரணத்ததினுல் அழிகிறது. ஏ இல்லாத காரணத்தினுல் அழிகிறது. மிகவும் கஷ்டப்பட்டு பயிர் அர்ய்து, கதிராக வரும்பொழுது எலிகளின் உபத்திரவத்தினுல் பெரிய மசழிவு ஏற்படுகிறது. எலிகளின் காரணமாக ஏற்படும் பெரிய அழிவை நம்முடைய அரசாங்கம் தடுத்து நிறுத்தவேண்டும். இந்தியா பூராவிலும் ஏற்படுகின்ற தன்மையாக இருக்கிறது அது. லட்சக்கணக்கான எலிகள், கோடிக்கணக்கான எலிகள் வளர்ந்திருக்கின்றன. நான் அதைத் தடுப்பதற்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். நாம் சாதாரணமாக ஆடு, மாடு, கோழிப் பண்ணைகளைத் தான் ஏற்படுத்துகிறோம். ஒரு பாம்புப் பண்ணையை ஏற்படுத்தவேண்டும். விஷம் இல்லாத பாம்பாக இருக்க வேண்டும். வேளாண்மைத் துறையில் இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து பாம்புப் பண்ணையை ஏற்படுத்தவேண்டும். எலிகளை சாப்பிடக் கூடிய பாம்புகளாக இருக்கவேண்டும். அப்படி ஒரு பண்ணையை ஏற்படுத்த ஏராளமான பாம்புகளை உற்பத்தி செய்து, விஷப் பல்லை எடுத்து விட்டு, விஷம் இல்லாத பாம்புகளை வளர்த்து எலிகளைப் பிடிக்கவேண்டும். (பேரவைத் துணைத் தலைவர் : ரொம்ப பயங்கரமாக இருக்கிறது). பாங்காங் நகரத்தில் நான் ஒரு பாம்புப் பண்ணையை பார்த்தேன். விஷத்தை எடுத்து வைத்தியத்திற்கு உபயோகப்படுத்துகிறார்கள். நாம் ஏன் அது மாதிரி ஏற்படுத்தக்கூடாது என்பது பற்றி சிந்திக்கவேண்டும். எலக்டிரிக் கரெண்டு வைத்து எலிகளை சாகடிக்க ஏற்பாடு செய்தால், மனிதர்கள் சாகக்கூடிய ஆபத்து ஏற்படும். ஆகவே, இதை ஒரு திட்டமாக அரசாங்கம் ஏற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.